u/s 173 BNSS

# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு-154-இன்-கீழ்)~~

C 8213040

1. District / மாவட்டம் : கிருஷ்ணகிரி PS / காவல்நிலையம் : ஊ.த.க பிரிவு Year / ஆண்டு : 2025 FIR No. / மு.த.அ. எண் : 03/AC/2025 Date / நாள் : 18.02.2025

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம், 1988 Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம் 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 15.02.2025 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 11.30 மணி Time to : நேரம் வரை —
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.02.2025 Time : நேரம் 06.30 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-I Time : நேரம் 07.20 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 20கி.மீ வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி பூதிமுட்லு கிராமம், வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G.சுரேஷ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோவிந்த கவுடு
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 38 (d) Nationality : நாட்டினம் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் தனியார் துறை (g) Address : முகவரி கதவு எண்.1/163, பூதிமுட்லு கிராமம், வேப்பனப்பள்ளி அஞ்சல், கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. ஜெயகாந்த், சர்வேயர், கிருஷ்ணகிரி வட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………………. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18-2-2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

18/02/25

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18.02.2025 at 0945 hrs.

Name: பெயர் S. பிரபு
Rank: நிலை ……………………No. எண் ……….
காவல் ஆய்வாளர்,
உ.ணா.கு.க-பிரிவு,
திருவத்ணகிரி.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 3/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 18.02.2025-ம் தேதி காலை 06.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி அஞ்சல், பூதிமுட்லு கிராமத்தை சேர்ந்த திரு.கோவிந்த கவுடு மகன் திரு.G.சுரேஷ் என்பவர் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர் G.சுரேஷ், S/o கோவிந்த கவுடு, கதவு எண்.1/163, பூதிமுட்லு கிராமம், வேப்பனப்பள்ளி அஞ்சல், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கிருஷ்ணகிரி மாவட்டம். அய்யா, நான் மேலே சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் உள்ளனர். நான் பெங்களூரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பொறியாளராக வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரில் எனது தாத்தா சின்ன வெங்கடப்பாவுக்கு சொந்தமாக பூர்வீக சொத்தாக சுமார் ஒரு ஏக்கர் நிலம் உள்ளது. அதனை கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் எனது தாத்தாவின் வாரிசுகளான எனது அப்பா கோவிந்த கவுடு, எனது சித்தப்பா நல்லப்பா, எனது அத்தை கெம்பம்மா ஆகியோர் பாகப்பிரிவினை செய்து வேப்பனப்பள்ளி சார்-பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.4163/2024-ன் படி பதிவு செய்துள்ளனர். அதில் எனது அத்தை கெம்பம்மாவுக்கு 4 செண்ட் நிலம் பாகமாக கிடைத்துள்ளது. எனது அத்தைக்கு ஆண் வாரிசுகள் இல்லாததாலும், அவருக்கு எழுத படிக்க தெரியாததாலும் நான் அவருடைய பாகமான 4 செண்ட் நிலத்திற்கு பட்டா மாறுதல் உட்பிரிவு கோரி ஆன்லைனில் கடந்த 25.01.2025-ஆம் தேதி எனது அத்தை கெம்பம்மா பெயரில் விண்ணப்பம் செய்தேன். இது தொடர்பாக கிருஷ்ணகிரி தாலுகா ஆபீசில் சர்வேயராக உள்ள திரு.ஜெயகாந்த் என்பவர் கடந்த 09.02.2025-ஆம் தேதி மாலை சுமார் 03.40 மணியளவில் எனக்கு போன் செய்து பட்டா மாறுதல்

தொடர்பாக நிலத்தை அளப்பதற்கு அடுத்த நாள் வருவதாக சொன்னார். நான் வேலைக்கு செல்ல வேண்டும் என கூறியதால் சரி நான் பிறகு பேசுகிறேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். மீண்டும் 13.02.2025-ஆம் தேதி மாலை சுமார் 06.45 மணியளவில் எனக்கு போன் செய்து பட்டா மாறுதல் தொடர்பாக நிலத்தை அளப்பதற்காக 15.02.2025-ஆம் தேதி வருவதாக சொன்னார். கடந்த 15.02.2025-ஆம்தேதி சனிக்கிழமை காலை சுமார் 11.00 மணியளவில் சர்வேயர் திரு.ஜெயகாந்த் தன்னுடன் திலீப் என்பவரை அழைத்துக்கொண்டு எங்கள் ஊருக்கு நேரில் வந்து எனது அத்தையின் 4 செண்ட் நிலத்தை அளந்து கொடுத்தார். பிறகு சுமார் 11.30 மணிக்கு அங்கிருந்து அவர் புறப்படும்போது என்னிடம், பட்டா மாறுதல் செய்து தா ஆபீஸ் செலவுக்கு ஏதாவது பணம் கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் எவ்வளவு சார் ஆகும் என்று கேட்டேன். ரூ.4,000/- கொடுங்கள் என்று சர்வேயர் சொன்னார். நான் வேலைக்கு பெங்களூர் சென்றுவிடுவேன் அதனால் என் அத்தையிடம் பேசிவிட்டு சொல்கிறேன் என்று நான் சொன்னதற்கு அவர் நீங்கள் நேரில் வரமுடியலைனா பரவாயில்லை, நான் ஏதாவது செல் நம்பர் சொல்றேன் அதற்கு பணம் அனுப்பி விட்ருங்க என்று சொன்னார். அதற்கு நான் என் அத்தையிடம் பணம் வாங்கிட்டு இரண்டு நாள் கழித்து வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். எங்கள் நிலத்தை பத்திரப்பதிவு செய்யும்போதே பட்டா மாறுதல் உட்பிரிவு கட்டணமாக ரூ.2,400/- ஏற்கனவே அரசுக்கு செலுத்தியுள்ளோம். எனவே, ஆபீஸ் செலவுக்கு என்ற பெயரில் லஞ்சம் கொடுத்து பட்டா மாறுதல் உட்பிரிவு செய்ய எனக்கு விருப்பம் இல்லை. எனவே, சர்வேயர் ஜெயகாந்த் என்னிடம் கேட்ட ரூ.4,000/- லஞ்சப்பணத்துடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே, என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.4,000/- கேட்ட கிருஷ்ணகிரி சர்வேயர் ஜெயகாந்த் என்பவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளிக்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) G.சுரேஷ், 18.02.2025.

Sir, a computer typed complaint has been received by me on 18.02.2025 at 06.30 hrs. Further a quick verification on the general

reputation of the accused Tr.Jayaganth has been made and it is learnt to be not good and motive and antecedents of the informant have been checked and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.3/AC/2025 u/s 7 (a) of the PC Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today on 18.02.2025 at 07.20 hrs against the accused Tr.Jayaganth. The original FIR and complaint is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and remaining copies are sent to the officers concerned.

18/02/25

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி.